சுருக்கம்

வேளாண்மைத் துறை – தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு "குறுவை தொகுப்புத் திட்டம் 2018" ரூ.115.672 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தது – வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.உ.1) துறை

அரசாணை ( 2D ) எண்.123

நாள்: 23.07.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049, ஆடி 7

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண்.94, வேளாண்மை (வே.உ.1) துறை, நாள் 15.6.2018.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண். நெ&சி 1/ 66655/ 2018(1), நாள் 13.6.2018 மற்றும் 06.07.2018.
3. தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), கடித எண். ஏஎம்1/20604/2018, நாள் 10.07.2018.

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு "குறுவை தொகுப்புத் திட்டம் 2018" செயல்படுத்த ரூ.115.672 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேற்படி அரசாணையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு "குறுவை தொகுப்புத் திட்டம் 2018"–ஐ இவ்வாணையின் பிற்சேர்க்கையில் காணும் வழிகாட்டு நெறிமுறையின்படி செயல்படுத்திட வேளாண்மை இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை 5,
தலைமைப் பொறியாளர்( வேளாண்மை பொறியியல்), சென்னை–35
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பனகல் பார்க், சென்னை–15.

(த.பி.பா.)

இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5.
செயல் அலுவலர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை–32
சம்பள கணக்காளர் (கிழக்கு/தெற்கு) சென்னை 8/35 (பெயரில்)
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள்.
கருவூல அலுவலர்கள் – உரிய மாவட்டங்கள்.
முதன்மை மாநில கணக்காயர் (A&E/G&SSA/E&RA/AAD) சென்னை 8. (பெயரில்)

<u>நகல்</u>

இயக்குநர், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு, கோவை 13.
இயக்குநர், STAMIN, குடுமியான்மலை, புதுக்கோட்டை மாவட்டம்.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை 3.
நிதி (Agriculture/BG-1/BG II) துறை, சென்னை 9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை 9.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக எழுத்தர், சென்னை 9,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மறும் அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை 9.
வேளாண்மை (அந 3/வேஉ 1/வேஉ3/வெபொ 1) துறை, சென்னை 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/7/18

பிரிவு அலுவலர்

23/7/18

பிற்சேர்க்கை

அரசாணை (2டி) எண்.123, வேளாண்மை (வே.உ.1) துறை, நாள் 23.07.2018.

## டெல்டா மாவட்டங்களில் குறுவை தொகுப்புத் திட்டம் 2018 – வேளாண்மை இயக்குநரகம் மூலம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines)

2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட குறுவை தொகுப்புத் திட்டம் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

### அ) நெல் பயிருக்கான இனங்கள்

**1) நெல் விதை விநியோகம்; (கிலோ ஒன்றுக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ.17.50/– )**

1. அறிவிக்கப்பட்ட நெல் இரகங்களில் ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட வேண்டும்.
2. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 10 வருடங்களுக்குட்பட்ட அறிவிக்கப்பட்ட ரகங்களும், விதை கிராமத் திட்டத்தின் கீழ் அனைத்து ரகங்களுக்கும் 50 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக கிலோ ஒன்றிற்கு ரூ. 17.50/– வழங்கப்பட வேண்டும்.
3. குறுவை தொகுப்புத்திட்டத்திற்கு தேவையான இரகங்களில் போதுமான அளவு நெல் விதைகள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு உள்ளதை வட்டார உதவி வேளாண்மை இயக்குநர்கள் உறுதி செய்திட வேண்டும்.
4. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தில் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் வரை நெல் விதை விநியோகம் செய்திட வேண்டும். மேலும், பயனாளிகள் விவரத்தினை அதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
5. விதை கிராமத் திட்டத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு மட்டுமே நெல் விதைகள் விநியோகம் செய்யப்படவேண்டும். பயனாளிகள் விவரத்தினை அதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**2) இயந்திர நடவிற்கான உதவித் தொகை (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.4000/–)**

1. பாய் அல்லது தட்டு நாற்றங்கால் அமைத்து, இயந்திர நடவு/திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்வதற்கு, வேளாண்மை உதவி அலுவலர்கள் விவசாயிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
2. வேளாண்மை பொறியியல்துறை, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தனியார் மூலம் அமைக்கப்பட்டுள்ள இயந்திர வாடகை மையங்களில் உள்ள நடவு இயந்திரங்களை பயன்படுத்தி, நெல் நடவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும்.
3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஒரு எக்டர் அதாவது இரண்டரை ஏக்கர் வரை உதவித் தொகை வழங்கலாம்.
4. குத்தகை விவசாயிகளுக்கு உரிய சான்றிதழை சரிபார்த்து உதவித் தொகை வழங்கலாம்.
5. மின் இணைப்பு, டீசல் பம்ப் செட் மற்றும் சூரிய சக்தி மோட்டார் பம்ப் செட்டுகள் மூலம் பாசனம் செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் உதவித் தொகை வழங்கலாம்.

(கு.பி.பா.)

6. இயந்திர நடவுக்கான உதவித்தொகை பெறுவதற்கான பயனாளிகள் பட்டியல் தயார் செய்யும் பொருட்டு, உத்தேச பரப்பு, உத்தேச நடவு நாள் ஆகிய விவரங்களுடன் உரிய படிவத்தில் வேளாண்மை உதவி அலுவலர்களிடம் இயந்திர நடவுக்கு முன்னரே விண்ணப்பிக்க வேண்டும்.

7. வேளாண்மை உதவி அலுவலர், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் இயந்திர நெல் நடவு / திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்ட பரப்பளவினை ஆய்வு செய்து வேளாண்மை உதவி இயக்குநரிடம் உதவித் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

8. நடவு முடிந்து ஆய்வு மேற்கொண்ட பின், விவசாயிகள் பாய் அல்லது தட்டு நாற்றங்கால் அமைத்து, இயந்திர நடவு/திருந்திய நெல் சாகுபடி மேற்கொண்டதற்கான செலவுப்பட்டியல், வங்கிக் கணக்கு எண், வங்கிக்கணக்குப் புத்தகத்தின் நகல் மற்றும் நடவு செய்த வயலில் பயனாளியுடன் சேர்த்து எடுத்த புகைப்படத்துடன் அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.

9. உதவித்தொகையானது பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ECS மூலம் பற்று வைக்கப்பட வேண்டும்.

**3) நெல் நுண்ணூட்டக்கலவை விநியோகத்திற்கான மானியம் : (ஏக்கருக்கு 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 80/–)**

1. வேளாண்மை உதவி அலுவலர்கள் பயனாளிகளை தேர்வு செய்து உரிய விண்ணப்பம் பெற்று விநியோகம் செய்யப்பட வேண்டும்.

2. ஒரு ஏக்கருக்கு 5 கிலோ வீதம் நெல் நுண்ணூட்டக்கலவை வழங்க வேண்டும்.

3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை மானியம் வழங்கலாம்.

4. புதுக்கோட்டை குடுமியான்மலையில் இயங்கும் நுண்ணூட்டக்கலவை உற்பத்தி மையத்தின் மூலம் தேவையான நெல் நுண்ணூட்டக் கலவையினை முன் கூட்டியே பெற்று, வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்ய, வேளாண்மை உதவி இயக்குநர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நுண்ணூட்ட உரக் கலவை வரவு மற்றும் இருப்பை வேளாண்மை உதவி இயக்குநர்/ வேளாண்மை இணை இயக்குநர் உறுதி செய்ய வேண்டும்.

**4) துத்தநாக சல்பேட் உபயோகத்திற்கான உதவித்தொகை : (ஏக்கருக்கு 50 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 200/–)**

1. ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதம் துத்தநாக சல்பேட் பயன்படுத்த வேண்டும்.

2. துத்தநாக சல்பேட்டை தனியார் உரக்கடையில் வாங்கி பயன்படுத்தியபின், அதற்கான விலைப்பட்டியலை சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெற்று உதவி வேளாண்மை அலுவலர் அலுவலகத்தில் சேர்ப்பிக்கவேண்டும்.

3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை பின்னேற்பு மானியமாக உதவித் தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ECS மூலம் பற்று வைக்கப்பட வேண்டும்.

(த.பி.பா.)

5) ஜிப்சம் உபயோகத்திற்கான_உதவித்தொகை: (ஏக்கருக்கு 100 சதவீத மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 600/–)

1. ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வீதம் ஜிப்சம் பயன்படுத்த வேண்டும்.
2. ஜிப்சம் உரத்தை தனியார் உரக்கடையில் வாங்கி பயன்படுத்தியபின், அதற்கான விலைப்பட்டியலை சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெற்று உதவி வேளாண்மை அலுவலர் அலுவலகத்தில் சேர்ப்பிக்கவேண்டும்.
3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை பின்னேற்பு மானியமாக உதவித் தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ECS மூலம் பற்று வைக்கப்பட வேண்டும்.

ஆ) பயறுவகை பயிருக்கான இனங்கள்

1) சான்று விதை விநியோகம்: (60 சதவீத மானியம் அல்லது ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.384/–)

1. வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான பயறுவகை விதைகளை இருப்பு வைப்பதற்கு வேளாண்மை உதவி இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. விவசாயிகள் விரும்பும் பயறுவகை ரகங்களை விநியோகம் செய்ய வேண்டும்.
3. விதை கிராமத் திட்டத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு மட்டும் 8 கிலோ பயறுவகை விதைகள் விநியோகம் செய்யப்படவேண்டும். பயனாளிகள் விவரத்தினை விதைக் கிராமத் திட்டத்திற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

2) பயறு வகைகளுக்கான திரவ உயிர்உர விநியோகம் (50 சதவீத மானியம் அல்லது ஏக்கருக்கு ரூ.60/– இதில் எது குறைவோ)

1. ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற திரவ உயிர் உரங்கள் ஏக்கருக்கு தலா 200 மி.லி வீதம் பயன்படுத்த வேண்டும்.
2. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை திரவ உயிர் உரங்கள் வழங்கலாம்.
3. வேளாண்மை உதவி இயக்குநர்கள், திரவ உயிர் உரங்களை வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் உயிர் உர உற்பத்தி மையங்களிடமிருந்து காலத்தே பெற்று, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்ய வேண்டும்.
4. உயிர் உரங்களின் வரத்து மற்றும் இருப்பை வேளாண்மை உதவி இயக்குநர்கள்/வேளாண்மை இணை இயக்குநர்கள் உறுதி செய்ய வேண்டும்.
5. விவசாயிகளிடமிருந்து உரிய விண்ணப்பங்களை பெற்று தகுந்த அலுவலர்களின் பரிந்துரைப்படி திரவ உயிர் உரங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

3) பயறு வகைகளுக்கான நுண்ணூட்டக்கலவை விநியோகம் (50 சதவீத மானியம் அல்லது ஏக்கருக்கு ரூ.200/– இதில் எது குறைவோ)

1. பயறு வகைகளுக்கான நுண்ணூட்டக்கலவை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் பயன்படுத்த வேண்டும்.
2. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை பயறு வகைகளுக்கான நுண்ணூட்டக்கலவை வழங்கலாம்.

(த.பி.பா.)

3. புதுக்கோட்டை குடுமியான்மலையில் இயங்கும் நுண்ணூட்டக்கலவை உற்பத்தி மையத்தின் மூலம் தேவையான பயறு வகைகளுக்கான நுண்ணூட்டக்கலவையினை முன் கூட்டியே பெற்று, வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்ய, வேளாண்மை இணை இயக்குநர்/வேளாண்மை உதவி இயக்குநர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. நுண்ணூட்டக் கலவை வரத்து மற்றும் இருப்பை வேளாண்மை உதவி இயக்குநர்/வேளாண்மை இணை இயக்குநர் உறுதி செய்ய வேண்டும்.

5. விவசாயிகளிடமிருந்து உரிய விண்ணப்பங்களை பெற்று தகுந்த அலுவலர்களின் பரிந்துரைப்படி நுண்ணூட்ட கலவை விநியோகம் செய்யப்பட வேண்டும்.

**4) <u>டிஏபி இலை வழி தெளிப்பு</u> (50 சதவீத மானியம் அல்லது ஏக்கருக்கு ரூ.260/– இதில் எது குறைவோ)**

1. பயறுவகைப் பயிர்கள் பூக்கும் பருவத்திலும், அதன்பிறகு 15 நாட்கள் கழித்து இரண்டாம் முறையும் டிஏபி உரத்தை இலைவழி மூலம் தெளிப்பதற்கு ஏக்கருக்கு தலா 5 கிலோ வீதம் ஆக இருமுறை மேற்கொள்ள வேண்டும்.

2. வட்டார அளவில் டிஏபி உர இருப்பைப் பொறுத்து, அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தமிழ்நாடு வேளாண் கூட்டுறவு இணையம் (TANFED) மூலமாக கொள்முதல் செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

3. தேவையான டிஏபி உர இருப்பு மற்றும் குறித்த காலத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைப்பதை சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்/வேளாண்மை இணை இயக்குநர் உறுதி செய்ய வேண்டும்.

4. இலைவழி மூலம் தெளிப்பதற்கு அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை டிஏபி உரம் வழங்கலாம்.

5. ஏக்கருக்கு 2 தெளிப்பிற்கு 10 கிலோ டி.ஏ.பி உரத்திற்கு அதிகபட்சமாக ரூ.120/– வீதமும் தெளிப்பதற்கு செலவுத் தொகையாக அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.140/– வீதமும் ஆக மொத்தம் ஏக்கருக்கு ரூ.260/– வழங்கலாம்.

6. வேளாண்மை உதவி அலுவலர் டிஏபி உரத் தெளிப்பை உறுதி செய்த பின்னர், சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் பெற்று தகுந்த அலுவலர்களின் பரிந்துரையின் பேரில் வேளாண்மை உதவி இயக்குநர் தெளிப்பிற்கான செலவுத் தொகையினை பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ECS மூலம் பற்று வைக்க வேண்டும்.

**இ) இயந்திரங்கள்/பொது இனங்கள்;**

**1) பவர்டில்லர் (8 குதிரை சக்தி திறன் மற்றும் அதற்கு மேல்) மற்றும் ரோட்டவேட்டர்**

- <u>மானிய விபரங்கள்</u> (வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளபடி மானியம் வழங்க வேண்டும்) <u>:</u>
- <u>பவர்டில்லர் (8 குதிரை சக்தி திறன் மற்றும் அதற்கும் மேல்) :</u>
  - ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.75,000 இதில் எது குறைவோ
  - இதர பயனாளிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.60,000 இதில் எது குறைவோ

(த.பி.பா.)

❖ <u>ரோட்டவேட்டர் (சுழல் கலப்பை):</u>

- 20 குதிரை சக்தி திறனுக்கும் குறைவான டிராக்டர் மற்றும் பவர்டில்லரால் இயங்கும் ரோட்டவேட்டர் (சுழல் கலப்பை)
    - ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.35,000 இதில் எது குறைவோ
    - இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.28,000 இதில் எது குறைவோ

- 20 குதிரை சக்தி திறனுக்கும் மேல் 35 குதிரை சக்தி திறனுக்கும் குறைவான டிராக்டரால் இயங்கும் ரோட்டவேட்டர்
    - ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.44,000 இதில் எது குறைவோ
    - இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.35,000 இதில் எது குறைவோ

- 35 குதிரை சக்தி திறனுக்கும் மேல் உள்ள டிராக்டரால் இயங்கும் ரோட்டவேட்டர்
    - ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.63,000 இதில் எது குறைவோ
    - இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.50,000 இதில் எது குறைவோ

➢ <u>**கருவியை பெறுவதற்கான வழிமுறைகள்:**</u>

- உழவன் செயலியில் உள்ள "**இடுபொருள் முன்பதிவு**" என்பதனை முதலில் தேர்வு செய்திட வேண்டும்.
- அதன் பின்னர் முன்னுரிமை பதிவில் "**வகை**" என்பதின் கீழ் "**பண்ணை இயந்திரங்கள்**" என்பதனை தேர்வு செய்தவுடன் அவரது ஆதார் எண்ணை பதிவு செய்திட வேண்டும்.
- அவ்வாறு பதிவு செய்திட்ட பின்னர் அவருக்கு ஒருமுறை உபயோகிக்கக் கூடிய கடவு எண் (OTP) அவருடைய கைப்பேசி எண்ணுக்கு அனுப்பப்படும்.
- அந்த எண்ணை பதிவு செய்திட்டவுடன் உழவன் செயலியில் அவரைப்பற்றியும் அவரது முகவரி போன்ற விபரங்களையும் அளித்திட வேண்டும். அதன் பின்னர் உழவன் செயலியில் அவரது விண்ணப்பம் பதிவு செய்யப்படும்.
- பின்னர் அவரது விண்ணப்பம் மத்திய அரசின் இணையதளமான "agrimachinery.nic.in" உடன் இணைக்கப்பட்டு அவருக்கு கடவுச்சொல் ஒன்று வழங்கப்படும்.
- அந்த கடவுச் சொல்லை பயன்படுத்தி, விவசாயி மத்திய அரசின் இணையதளத்தில் தங்களது நிலம் சம்பந்தமான விபரங்கள், வங்கி கணக்கு விபரங்கள், தங்களது குடும்பத்தாரைப் பற்றிய விபரங்கள் ஆகியவற்றினை அளிக்க வேண்டும்.
- மேலும் தனது புகைப்படம், அடையாள அட்டையாக இருப்பிடச் சான்று, கடவுச் சான்று (Passport), குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, நிரந்தர கணக்கு எண் (PAN No.) இவற்றில் ஏதேனும் ஒன்று, வங்கியின் பாஸ்புக் அல்லது ரத்து செய்யப்பட்ட வங்கி காசோலை, தேவைப்படின் அவரின் சாதி சான்றிதழ் ஆகிய அனைத்தையும் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

(கு.பி.பா.)

- பின்னர் தனக்கு தேவைப்படும் பவர்டில்லர் அல்லது ரோட்டவேட்டரினை இணைய தளத்தின் மூலம் தேர்வு செய்திட வேண்டும். அப்போது அவருக்கு 6 இலக்க இரகசிய குறியீட்டு எண் (PIN No.) அளிக்கப்படும்.
- மேற்படி இணையதளத்தில் விவசாயி தனக்கு தேவையான ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரின் முகவரை தேர்வு செய்திட வேண்டும். இவ்வாறாக 15 நாட்களுக்குள் உரிய முகவரை தேர்வு செய்யாத பட்சத்தில் அவரின் விண்ணப்பம் இரத்து செய்யப்படும்.
- 2 மாதங்களுக்கு அவ்விவசாயியால் திரும்பவும் விண்ணப்பிக்க இயலாது. முகவரை ஒரு முறை தேர்வு செய்த பின்னர், வேறு ஒரு முகவரை சம்பந்தப்பட்ட விவசாயியால் தேர்வு செய்திட இயலாது.
- அவ்வாறு தேர்வு செய்த முகவரை நேரில் சந்தித்து அனைத்து ஆவணங்களையும் மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட 6 இலக்கு இரகசிய குறியீட்டு எண்ணையும் 30 நாட்களுக்குள் அளித்திடல் வேண்டும்.
- அவ்வாறு 30 நாட்களுக்குள் ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரை முகவரிடம் இருந்து வாங்காவிடில் அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்படும்.
- விவசாயி தேர்வு செய்த முகவரிடம் ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லருக்கு உண்டான முகவரின் விற்பனை விலைக்குண்டான மொத்தத் தொகையினை வரைவோலையாகவோ, ரொக்கமாகவோ, வங்கி காசோலையாகவோ அளித்திடல் வேண்டும்.
- வங்கி காசோலையாக அளிக்கும் பட்சத்தில், விவசாயி தனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தில் உள்ள உரிய பதிவினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
- விவசாயி பணமாக முகவரிடம் அளிக்கும் பட்சத்தில், மேற்படி முகவர் விவசாயியிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதற்கான உரிய இரசீதினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.
- அதன் பின்னர் அம்முகவர் 5 நாட்களுக்குள் உரிய விலைப் பட்டியலை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திடவேண்டும்.
- முகவர் ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரின் இன்ஜின் எண், சேஸிஸ் எண், கருவியின் மாடல் விபரம் ஆகியவற்றையும் அளித்திடல் வேண்டும்.
- முகவர், விநியோகம் செய்யப்பட்ட ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாயி ஆகியோருடன் கூடிய புகைப்படத்தினை இணைய தளத்தில் முகவரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- விவசாயி அடுத்த 10 ஆண்டுகளுக்கு பின்னர்தான் ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரை மறுபடியும் மானிய விலையில் வாங்கிட இயலும்.
- மேலும் ஒரு நிதியாண்டில் தனக்கு தேவைப்படும் ஏதாவது இரண்டு வேளாண் இயந்திரம் அல்லது கருவிகளை மட்டுமே மானிய விலையில் வாங்கிட இயலும்.
- வேளாண் இயந்திரமயமாக்குதல் துணை இயக்கத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி அரசு மானியம் பெற தகுதி உடையவராக இல்லாத பட்சத்தில் அவருக்கு மானியம் வழங்கப்படாது.

- அவ்வாறு தெரிந்தும் மொத்த விற்பனை விலைக்கு ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரை முகவரிடம் இருந்து வாங்கிடும் பட்சத்தில் அவருக்கு அரசு மானியம் அளித்திட இயலாது.

- ரோட்டவேட்டர் மற்றும் பவர்டில்லர் தயாரிப்பு நிறுவனங்கள் இணையதளத்தின் மூலம் தங்களது முகவரால் பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து விபரங்களையும் 5 நாட்களுக்குள் மேலாய்வு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரினை மானியம் மூலமாக விவசாயி பெற்றவுடன் அவரிடமிருந்து 30 ரூபாய்க்கான பத்திர தாளில் மேற்படி பவர்டில்லர் அல்லது ரோட்டவேட்டர் கருவியை 4 வருடங்களுக்கு விற்கமாட்டேன் எனவும் அப்பகுதியில் உள்ள தேவைப்படும் விவசாயிகளுக்கு தனது தேவை போக மற்ற நேரங்களில் வாடகைக்கு அளிப்பேன் எனவும் உறுதி மொழிக்கடிதம் வேளாண்மைப் துறையின் சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களால் பெறப்பட வேண்டும்.

- உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் ஆகியோர் விவசாயிகளின் நிலத்திற்கு நேரில் சென்று விவசாயிகள் வாங்கிய ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரினை ஆய்வு செய்ய வேண்டும்.

- விவசாயி மற்றும் விற்பனை செய்த முகவரால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து விபரங்கள் மற்றும் ஆவணங்களையும் சரிபார்க்க வேண்டும்.

- அதன் பின்னர், விவசாயிக்கு வழங்கப்பட்ட ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர், சம்பந்தப்பட்ட விவசாயி மற்றும் ஆய்வு அலுவலர் ஆகியோருடன்கூடிய (Geotagged) புகைப்படத்தினை இணைய தளத்தில் உதவி வேளாண்மை அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

- மேலாய்வு செய்த அறிக்கை மற்றும் சரிபார்ப்பு பட்டியல் மற்றும் அலுவலரின் குறிப்புரையும் பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

- அதன் பின்னர் வேளாண்மை அலுவலர்கள்/ வேளாண்மை உதவி இயக்குநர் விவசாயியின் இடத்திற்கு நேரில் சென்று ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர் இயந்திரத்தினை ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- வேளாண்மை துணை இயக்குநர் 20% மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் 10% விவசாயியின் இடத்திற்கு நேரில் சென்று ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர் இயந்திரத்தினை ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் அனைத்தும் முடிந்த பின்னர் இறுதியாக விவசாயியின் வங்கி கணக்கில் உரிய மானியமானது ஆய்வு முடிந்த 10 நாட்களுக்குள் ECS மூலம் செலுத்தப்பட வேண்டும்.

- விவசாயியிடம் இருந்து மானியம் பெற்றுக் கொண்டதற்கான இரசீது அல்லது அவரின் வங்கிக் கணக்கில் மானியம் வரவு வைக்கப்பட்ட விபரத்திற்கான ஒப்புதல் கடிதம் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெறப்பட வேண்டும்.

(த.பி.பா.)

2) நீர் பாசனக் குழாய்கள் விநியோகம் (PVC குழாய்கள் – மீட்டர் ஒன்றுக்கு ரூ.35/– அலகு ஒன்றுக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ.15,000/ அல்லது இதில் எது குறைவோ)

1. இத்திட்டம் மூலம் 4 அங்குலம் (110 மி.மீ) விட்டம் மற்றும் 6 மீட்டர் நீளம் கொண்ட 30 பிவிசி குழாய்கள் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஓர் அலகு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.
2. பிவிசி குழாய்கள் தேவையை கணக்கிட்டு, உரிய நிறுவனங்களையும் விலைப்புள்ளியினையும் வேளாண் பொறியியல் துறை பட்டியலிடவேண்டும் (to be empanelled)
3. உழவன் செயலி மூலம் விண்ணப்பிக்கும் விவசாயிகளிடம் உரிய விண்ணப்பம் பெற வேண்டும்.
4. தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் முழுமையான விவரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், முன்பணப்பட்டியல், முழுத் தொகைக்கான வரைவோலையினை விவசாயிகளிடமிருந்து பெற வேண்டும்.
5. கடந்த இரண்டு ஆண்டுகளில் இதரத் திட்டங்களில் பயனடையாத விவசாயிகளை தேர்வு செய்ய வேண்டும்.
6. உதவி வேளாண்மை அலுவலரால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் அவர்களால் சான்றளிக்கப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனருக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.
7. ஆவணங்களை சரிபார்த்தபின், வேளாண்மை உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு நீர்ப்பாசன குழாய்கள் வழங்க ஆணை அளிக்க வேண்டும்.
8. நீர் பாசன குழாய்கள் விவசாயிக்கு வழங்கப்பட்டதனை வேளாண்மை உதவி இயக்குநர் ஆய்வு செய்து உரிய புகைப்படத்துடன் உறுதி செய்த பின், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பின்னேற்பு மானியத் தொகையினை ECS மூலம் செலுத்த வேண்டும்.

3) <u>வெண்ணாறு பகுதிக்கான பசுந்தாள் உர விதைகள் விநியோகம்</u> (100 சதவீத மானியம் / அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.1200/–)

1. வேளாண்மை இணை இயக்குநர்கள் தங்களுக்கு தேவையான பசுந்தாள் உர விதைகளை கணக்கிட்டு திறந்தவெளி ஒப்பந்தத்தின் அடிப்படையில், மாவட்ட அளவிலான கொள்முதல் குழுவின் ஒப்புதலுடன் கொள்முதல் செய்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்ய வேண்டும்.
2. வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக ஒரு ஏக்கருக்கு 20 கிலோ வீதம் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்ய வேண்டும்.
3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை பசுந்தாள் உர விதைகள் வழங்கலாம்.
4. திட்ட செயலாக்கத்தின் போது உரிய இனங்களுக்கு, சம்பந்தபட்ட மத்திய அரசு திட்ட வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். அதற்கான மானியத் தொகையினை அந்தந்த திட்டக் கணக்குத் தலைப்பில் நேர் செய்யப்படவேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான விளம்பர நிதியினை செலவிடுவதற்கு உரிய தெளிவுரையினை வேளாண்மை இயக்குநர் மாவட்டங்களுக்கு வழங்க வேண்டும்.

(த.பி.பா.)

4) ஆயில் என்ஜின் விநியோகம்; (50 சதவீதம் மானியம் அல்லது ரூ.15,000/– இதில் எது குறைவோ)

1. நீர் ஆதாரம் கொண்ட பயறு வகை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நீர் தெளிப்பானுடன் ஆயில் என்ஜின் வழங்கப்பட வேண்டும்.

2. பயனாளி ஒருவருக்கு 5 முதல் 10 குதிரைத் திறன் கொண்ட ஒரு ஆயில் என்ஜின் மட்டுமே வழங்க வேண்டும்.

3. உதவி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உழவன் செயலி மூலம் விண்ணப்பிக்கும் விவசாயிகளிடம் உரிய விண்ணப்பம் பெற வேண்டும்.

4. உதவி வேளாண்மை அலுவலர்கள் விவசாயிகளிடமிருந்து முன்பணப்பட்டியல் மற்றும் முழுத் தொகைக்கான வரைவோலையுடன் விண்ணப்பங்கள் பெற்றபின், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் அவர்களால் சான்றளிக்கப்பட்டு வேளாண்மை உதவி இயக்குநருக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

5. வேளாண்மை பொறியியல் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து மட்டுமே விவசாயிகள் ஆயில் என்ஜினை பெற வேண்டும்.

6. விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களை சரிபார்த்தபின், வேளாண்மை உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கல் ஆணை அளிக்க வேண்டும்.

7. விவசாயிக்கு ஆயில் என்ஜின் வழங்கப்பட்டதனை வேளாண்மை உதவி இயக்குநர் ஆய்வு செய்து உரிய புகைப்படத்துடன் உறுதி செய்த பின், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பின்னேற்பு மானியத் தொகையினை ECS மூலம் செலுத்த வேண்டும்.

**5) நீர் தெளிப்பான் (Sprinkler) விநியோகம்; (சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும் இதர விவசாயிக்கு 75 சதவீத மானியத்திலும் வழங்கப்படும்)**

1. இத்திட்டத்தின் கீழ் ஆயில் என்ஜின் வழங்கப்பெற்ற பயறு வகை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் மட்டுமே தகுதியுடையவர் ஆவர்.

2. நுண்ணீர் பாசனத் திட்ட விதிமுறைகளின்படி இத்திட்டம் நுண்ணீர்ப்பாசன இணையதளம் மூலம் செயல்படுத்த வேண்டும்.

3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஒரு யூனிட் மட்டுமே வழங்கலாம்.

4. குத்தகை விவசாயிகளுக்கு உரிய சான்றிதழை சரிபார்த்து வழங்கலாம்.

5. உதவி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உழவன் செயலி மூலம் விண்ணப்பிக்கும் விவசாயிகளிடம் உரிய விண்ணப்பம் பெற வேண்டும்.

(த.பி.பா.)

6. தோட்டக்கலைத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர்ப்பாசன நிறுவனத்திலிருந்து விவசாயிகள் நீர் தெளிப்பானை பெற்றுக்கொள்ளலாம்.
7. வேளாண்மை உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கல் ஆணை அளிக்க வேண்டும்.

**6) விளம்பரம்/ஆவணங்கள் தயாரித்தல்:**

குறுவை நெல் சாகுபடிக்கான விளம்பரம் மற்றும் ஆவணங்கள், புகைப்படங்கள், துண்டு பிரசுரங்களுக்கான செலவினங்களை மேற்கொள்ள மாவட்ட வேளாண் இணை இயக்குநர்களுக்கு வழங்கப்படும் தொகையினை உரிய வங்கிக்கணக்கில் பற்று வைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**<u>குறுவை தொகுப்பு திட்டம் – 2018 – வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

**<u>டெல்டா மாவட்ட விவசாயிகள் பவர்டில்லர் (8 குதிரை சக்தி திறன் மற்றும் அதற்கு மேல்) மற்றும் ரோட்டவேட்டர் (சுழல் கலப்பை) பெறுவதற்கான மானிய விபரங்கள்</u>**

டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை தொகுப்பு– 2018 திட்டத்தின் கீழ் பவர்டில்லர் (8 குதிரை சக்தி திறன் மற்றும் அதற்கும் மேல்) மற்றும் ரோட்டவேட்டரை வாங்குவதற்கு வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளபடி மானியம் வழங்கப்படும். அதன்படி பவர்டில்லர் (8 குதிரை சக்தி திறன் மற்றும் அதற்கும் மேல்) வாங்கிட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.0.75 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் இதர பயனாளிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.0.60 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

இதேபோல் 20 குதிரை சக்தி திறனுக்கும் குறைவான டிராக்டர் மற்றும் பவர்டில்லரால் இயங்கும் ரோட்டவேட்டர் (சுழல் கலப்பை) வாங்கிட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.0.35 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.0.28 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

20 குதிரை சக்தி திறனுக்கும் மேல் 35 குதிரை சக்தி திறனுக்கும் குறைவான டிராக்டரால் இயங்கும் ரோட்டவேட்டர் வாங்கிட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.0.44 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது ரூ.0.35 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

35 குதிரை சக்தி திறனுக்கும் மேல் உள்ள டிராக்டரால் இயங்கும் ரோட்டவேட்டர் வாங்கிட ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு, பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.0.63 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் இதர விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது 0.50 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.

(த.பி.பா.)

பவா்டில்லா் மற்றும் ரோட்டவேட்டா் கருவியை பெறுவதற்கான வழிமுறைகள்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள அனைத்து டெல்டா பாசனப்பகுதி விவசாயிகள், திருச்சி, கடலூர், புதுக்கோட்டை, அரியலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள டெல்டா பாசனப் பகுதி விவசாயிகள் பவா்டில்லா் அல்லது ரோட்டவேட்டரினை மானியத்தின் மூலம் வாங்கிட தகுதி உடையவா்கள்.

டெல்டா பாசனப்பகுதி விவசாயிகள், உழவன் செயலியில் உள்ள “**இடுபொருள் முன்பதிவு**” என்பதனை முதலில் தேர்வு செய்திட வேண்டும். அதன் பின்னா் முன்னுரிமை பதிவில் “**வகை**” என்பதின் கீழ் “**பண்ணை இயந்திரங்கள்**” என்பதனை தேர்வு செய்தவுடன் அவரது ஆதார் எண்ணை பதிவு செய்திட வேண்டும். அவ்வாறு பதிவு செய்திட்ட பின்னா் அவருக்கு ஒருமுறை உபயோகிக்கக் கூடிய கடவு எண் (OTP) அவருடைய கைப்பேசி எண்ணுக்கு அனுப்பப்படும். அந்த எண்ணை பதிவு செய்திட்டவுடன் உழவன் செயலியில் அவரைப்பற்றியும் அவரது முகவரி போன்ற விபரங்களையும் அளித்திட வேண்டும். அதன் பின்னா் உழவன் செயலியில் அவரது விண்ணப்பம் பதிவு செய்யப்படும். பின்னா் அவரது விண்ணப்பம் மத்திய அரசின் இணையதளமான “agrimachinery.nic.in” உடன் இணைக்கப்பட்டு அவருக்கு கடவுச்சொல் ஒன்று வழங்கப்படும். அந்த கடவுச் சொல்லை பயன்படுத்தி, விவசாயி மத்திய அரசின் இணையதளத்தில் தங்களது நிலம் சம்பந்தமான விபரங்கள், வங்கி கணக்கு விபரங்கள், தங்களது குடும்பத்தாரைப் பற்றிய விபரங்கள் ஆகியவற்றினை அளிக்க வேண்டும். மேலும் தனது புகைப்படம், அடையாள அட்டையாக இருப்பிடச் சான்று, கடவுச் சான்று (Passport), குடும்ப அட்டை, வாக்காளா் அட்டை, நிரந்தர கணக்கு எண் (PAN No.) இவற்றில் ஏதேனும் ஒன்று, வங்கியின் பாஸ்புக் அல்லது ரத்து செய்யப்பட்ட வங்கி காசோலை, தேவைப்படின் அவரின் சாதி சான்றிதழ் ஆகிய அனைத்தையும் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

பின்னா் “குறுவை தொகுப்புத் திட்டம்–2018”ன் கீழ் தனக்கு தேவைப்படும் பவா்டில்லா் அல்லது ரோட்டவேட்டரினை இணைய தளத்தின் மூலம் தேர்வு செய்திட வேண்டும். அப்போது அவருக்கு 6 இலக்க இரகசிய குறியீட்டு எண் (PIN No.) அளிக்கப்படும்.

மேற்படி இணையதளத்தில் விவசாயி தனக்கு தேவையான ரோட்டவேட்டா் அல்லது பவா்டில்லரின் முகவரை தேர்வு செய்திட வேண்டும். இவ்வாறாக 15 நாட்களுக்குள் உரிய முகவரை தேர்வு செய்யாத பட்சத்தில் அவரின் விண்ணப்பம் இரத்து செய்யப்படும். மேலும் 2 மாதங்களுக்கு அவ்விவசாயியால் திரும்பவும் விண்ணப்பிக்க இயலாது. முகவரை ஒரு முறை தேர்வு செய்த பின்னா், வேறு ஒரு முகவரை சம்பந்தப்பட்ட விவசாயியால் தேர்வு செய்திட இயலாது.

அவ்வாறு தேர்வு செய்த முகவரை நேரில் சந்தித்து அனைத்து ஆவணங்களையும் மற்றும் அவருக்கு அளிக்கப்பட்ட 6 இலக்கு இரகசிய குறியீட்டு எண்ணையும் 30 நாட்களுக்குள் அளித்திடல் வேண்டும். அவ்வாறு 30 நாட்களுக்குள் ரோட்டவேட்டா் அல்லது பவா்டில்லரை முகவரிடம் இருந்து வாங்காவிடில் அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்படும். விவசாயி தேர்வு செய்த முகவரிடம் ரோட்டவேட்டா் அல்லது பவா்டில்லருக்கு உண்டான முகவரின் விற்பனை விலைக்குண்டான மொத்தத் தொகையினை வரைவோலையாகவோ, ரொக்கமாகவோ, வங்கி காசோலையாகவோ அளித்திடல் வேண்டும்.

வங்கி காசோலையாக அளிக்கும் பட்சத்தில், விவசாயி தனது வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தில் உள்ள உரிய பதிவினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும். விவசாயி பணமாக முகவரிடம் அளிக்கும் பட்சத்தில், மேற்படி முகவா் விவசாயியிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதற்கான உரிய இரசீதினை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

(த.பி.பா.)

அதன் பின்னர் அம்முகவர் 5 நாட்களுக்குள் உரிய விலைப் பட்டியலை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திடவேண்டும். மேலும் முகவர் ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரின் இன்ஜின் எண், சேஸிஸ் எண், கருவியின் மாடல் விபரம் ஆகியவற்றையும் அளித்திடல் வேண்டும். மேலும் முகவர், விநியோகம் செய்யப்பட்ட ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர் மற்றும் சம்பந்தப்பட்ட விவசாயி ஆகியோருடன் கூடிய புகைப்படத்தினை இணைய தளத்தில் முகவரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விவசாயி அடுத்த 10 ஆண்டுகளுக்கு பின்னர்தான் ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரை மறுபடியும் மானிய விலையில் வாங்கிட இயலும். மேலும் ஒரு நிதியாண்டில் தனக்கு தேவைப்படும் ஏதாவது இரண்டு வேளாண் இயந்திரம் அல்லது கருவிகளை மட்டுமே மானிய விலையில் வாங்கிட இயலும்.

வேளாண் இயந்திரமயமாக்குதல் துணை இயக்கத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி அரசு மானியம் பெற தகுதி உடையவராக இல்லாத பட்சத்தில் அவருக்கு மானியம் வழங்கப்படாது. மேலும் அவ்வாறு தெரிந்தும் மொத்த விற்பனை விலைக்கு ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரை முகவரிடம் இருந்து வாங்கிடும் பட்சத்தில் அவருக்கு அரசு மானியம் அளித்திட இயலாது.

**வட்டார அளவில் நிதி ஒதுக்கீடு செய்தல்**

ரோட்டவேட்டர் மற்றும் பவர்டில்லருக்கான வட்டார அளவிலான இலக்கு மத்திய அரசின் இணைய தளமான "agrimachinery.nic.in" ல் அரசு ஆணை (2D) எண்.94 வேளாண்மை (வே.உ.1) துறை நாள்.15.06.2018–ன்படி ஒதுக்கீடு செய்யப்படும்.

**விவசாயியின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்தல்**

ரோட்டவேட்டர் மற்றும் பவர்டில்லர் தயாரிப்பு நிறுவனங்கள் இணையதளத்தின் மூலம் தங்களது முகவரால் பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து விபரங்களையும் 5 நாட்களுக்குள் மேலாய்வு செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**விவசாயியிடம் இருந்து பெறப்படும் உறுதிமொழி**

குறுவை தொகுப்புத் திட்டம்–2018ன் வாயிலாக ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரினை மானியம் மூலமாக விவசாயி பெற்றவுடன் அவரிடமிருந்து 30 ரூபாய்க்கான பத்திர தாளில் மேற்படி பவர்டில்லர் அல்லது ரோட்டவேட்டர் கருவியை 4 வருடங்களுக்கு விற்கமாட்டேன் எனவும் அப்பகுதியில் உள்ள தேவைப்படும் விவசாயிகளுக்கு தனது தேவை போக மற்ற நேரங்களில் வாடகைக்கு அளிப்பேன் எனவும் உறுதி மொழிக்கடிதம் வேளாண்மைப் பொறியியல் துறையின் சம்பந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் (வே.பொ) அவர்களால் பெறப்பட வேண்டும்.

**விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல்**

உதவி செயற் பொறியாளர் (வே.பொ), உதவிப் பொறியாளர் (வே.பொ), இளநிலைப் பொறியாளர் (வே.பொ) ஆகியோர் விவசாயிகளின் நிலத்திற்கு நேரில் சென்று விவசாயிகள் வாங்கிய ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லரினை ஆய்வு செய்ய வேண்டும்.

மேலும் விவசாயி மற்றும் விற்பனை செய்த முகவரால் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து விபரங்கள் மற்றும் ஆவணங்களையும் சரிபார்க்க வேண்டும்.

(த.பி.பா.)

அதன் பின்னர், விவசாயிக்கு வழங்கப்பட்ட ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர், சம்பந்தப்பட்ட விவசாயி மற்றும் ஆய்வு அலுவலர் ஆகியோருடன்கூடிய (Geotagged) புகைப்படத்தினை இணைய தளத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் ஆய்வு அலுவலரால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் மேலாய்வு செய்த அறிக்கை மற்றும் சரிபார்ப்பு பட்டியல் மற்றும் அலுவலரின் குறிப்புரையும் பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

அதன் பின்னர் செயற் பொறியாளர் (வே.பொ) அல்லது கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) விவசாயியின் இடத்திற்கு நேரில் சென்று ரோட்டவேட்டர் அல்லது பவர்டில்லர் இயந்திரத்தினை ஆய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் அனைத்தும் முடிந்த பின்னர் இறுதியாக விவசாயியின் வங்கி கணக்கில் உரிய மானியமானது ஆய்வு முடிந்த 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். மேலும் விவசாயிடம் இருந்து மானியம் பெற்றுக் கொண்டதற்கான இரசீது அல்லது அவரின் வங்கிக் கணக்கில் மானியம் வரவு வைக்கப்பட்ட விபரத்திற்கான ஒப்புதல் கடிதம் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடமிருந்து பெறப்பட வேண்டும்.

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

23/7/18

பிரிவு அலுவலர்
23/7/18